# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2394/67 - 2024 ජූලි මස 26 වැනි සිකුරාදා - 2024.07.26

*2394/67 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.-பி. 3/2021(III)

**2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்**

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 71 ஆம் பிரிவின்கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடனும் இலங்கை மத்திய வங்கியின் ஒருப்பாட்டுடனும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

கொழும்பு,
2024, யூலை 26.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2024 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (கரைகடந்த வங்கித்தொழில்-முதனிலை) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. சட்டத்தின்கீழ் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் நிறைவேற்றப்பட்ட அதிகாரமளிக்கப்பட்டவோர் ஆளின் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம் தொடர்பாக இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*3. (1) இரண்டாம் உபஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கம்பெனி, 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, (அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களைப் பதிவுசெய்தல், அவர்களுக்கு உரிமமளித்தல், அவர்களுக்கான அதிகாரவளிப்பு மற்றும் வேறு அங்கீகாரங்கள்) ஒழுங்குவிதிகளிலும், 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (கரைகடந்த கம்பெனிகளைப் பதிவுசெய்தல்) ஒழுங்குவிதிகளிலும் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கான உரிமமொன்றுக்காக ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.*

*(2) ஓராம் உப ஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியொன்று பின்வருமாறாகவிருத்தல் வேண்டும்:-*

*(அ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றாக வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமம்பெற்றதும் கொழும்புத் துறைமுக நகர அதிகாரசபை இடப்பரப்பிலும் அதிலிருந்தும் கொழும்புத் துறைமுக நகரக் கிளையினூடாகக் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு விரும்புகின்றதுமானவொரு கம்பெனி;*

*(ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கரைகடந்த கம்பெனியொன்றாக இலங்கையில் பதிவுசெய்யப்பட்டதும் வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றாக உரிமம்பெற்றதும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் கொழும்புத் துறைமுக நகரக் கிளையினூடாகக் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு விரும்புகின்றதுமானவொரு கம்பெனி; அல்லது*

*(இ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கரைகடந்த கம்பெனியொன்றாக இலங்கையில் பதிவுசெய்யப்பட்டதும் வேறொரு நாட்டில் அதனை அமைத்துருவாக்குகின்ற அல்லது அத்தகைய அமைத்துருவாக்கத்துக்கு வரைவிலக்கணங்கூறுகின்ற ஏதேனும் சட்டம், பட்டயம், நியதிச்சட்டம், அமைப்பகவிதி அல்லது வேறு சாதனத்தின்கீழ் வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு உரிமம்பெற்றதும் ஆனால் வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமம்பெறப்படாததும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் கொழும்புத் துறைமுக நகரக் கிளையினூடகக் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு விரும்புகின்றதுமானவொரு கம்பெனி.*

*4. மூன்றாம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியொன்று, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் கொழும்புத் துறைமுக நகரக் கிளையினூடாகக் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கான உரிமமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கெனப் பின்வரும் தேவைப்பாடுகளைத் திருப்திப்படுத்துதல் வேண்டும்:-*

*(அ) மூன்றாம் ஒழுங்குவிதியின் (2) ஆம் உபஒழுங்குவிதியில் குறிப்பீடுசெய்யப்பட்டவொரு கம்பெனியின் விடயத்தில், அத்தகைய கம்பெனி, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் தாபிக்கப்படவுள்ள அதன் கொழும்புத் துறைமுக நகரக் கிளைக்கு, 15 மில்லியன் ஐஅடொலரைக் கொண்ட குறித்தளிக்கப்பட்ட மூலதனத்தை அல்லது ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகையை வழங்குதல் வேண்டும்; அத்துடன்*

*(ஆ) மூன்றாம் ஒழுங்குவிதியின் (2) ஆம் உபஒழுங்குவிதியின் (ஆ) அல்லது (இ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டவொரு கம்பெனியின் விடயத்தில், அத்தகைய கம்பெனி பின்வருவனவற்றை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்:-*

(i) *அந்தக் கம்பெனியானது எந்த நாட்டில் கூட்டிணைக்கப்பட்டுள்ளதோ அந்த நாட்டின் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையிடமிருந்து, கொழும்புத் துறைமுக நகரஅதிகார இடப்பரப்பினுள் கொழும்புத் துறைமுக நகரக் கிளையொன்றைத் தாபிப்பதற்கு அத்தகைய கம்பெனிக்கு அது அனுமதியளித்துள்ளதென்பதை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழொன்று; அத்துடன்*

(ii) *கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தை நிறைவேற்றுவதில் கொழும்புத் துறைமுக நகரக் கிளையினால் உறப்பட்ட எல்லாக் கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும் தீர்த்துவைப்பதற்குத் தேவைப்படக்கூடியவாறான நிதிகளை அது வழங்குமென்ற பொருள்பட அதன் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட எழுத்திலான பொறுப்பேற்பொன்று.*

5. மூன்றாம் ஒழுங்குவிதியின்கீழான விண்ணப்பமொன்றைக் கவனத்துட்கொண்டபின்னர், ஆணைக்குழுவானது, சட்டத்தின் 42 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் அத்தகைய விண்ணப்பகாரர் ஈடுபடுவதற்காக உரிமமொன்றை வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கும்படி நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருக்கு விதந்துரைத்தல் வேண்டுமென்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் ஒருப்பாட்டுடன் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு அத்தகைய விண்ணப்பகாரருக்கான உரிமமொன்றை, அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய வழங்கலாம்.

6. (1) ஐந்தாம் ஒழுங்குவிதியில் தரப்பட்டுள்ளவாறு உரிமமொன்று வழங்கப்படுவதன்மேல், அத்தகைய உரிமத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான நியதிநிபந்தனைகளுக்கமையவும், மற்றும் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கமையவும்-

(அ) அத்தகைய விண்ணப்பகாரர் 3 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் உபஒழுங்குவிதியின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளவிடத்து, அத்தகைய கம்பெனி, கொழும்புத் துறைமுக நகரக் கிளையொன்றினூடாகக் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடலாம்;

(ஆ) அத்தகைய விண்ணப்பகாரர் 3 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் உபஒழுங்குவிதியின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளவிடத்து, அத்தகைய கம்பெனி, அத்தகைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கியின் தலைமையலுவலகத்தினது கொழும்புத் துறைமுக நகரக் கிளையொன்றினூடாகக் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடலாம்; அத்துடன்

(இ) அத்தகைய விண்ணப்பகாரர், 3 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் உபஒழுங்குவிதியின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளவிடத்து, அத்தகைய கம்பெனி எந்த நாட்டில் கூட்டிணைக்கப்பட்டுள்ளதோ அந்த நாட்டின் ஒழுங்குபடுத்தும் அதிகாரியினால் பணிப்பாணை விடுக்கப்பட்டவாறாகக் கொழும்புத் துறைமுக நகரக் கிளையொன்றினூடாக, அத்தகைய கம்பெனி, கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடலாம்.

(2) ஓராம் உபஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாகக் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் அதிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு எந்தக் கொழும்புத் துறைமுக நகரக் கிளை தொடர்பில் உரிமமொன்று வழங்கப்படுகின்றதோ அந்தக் கொழும்புத் துறைமுக நகரக் கிளை, முறையான வங்கியின் “கொழும்புத் துறைமுக நகரக் கிளை” எனவறியப்படுதல் வேண்டும்.

7. மூன்றாம் ஒழுங்குவிதியின் (2) ஆம் உபஒழுங்குவிதியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கம்பெனியொன்று கேடுவிளையாத அடிப்படையொன்றில் எல்லா நேரங்களிலும் 4(அ) என்னும் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட குறித்தளிக்கப்பட்ட மூலதனத்தைப் பேணுதல் வேண்டும்.

8. கொழும்புத் துறைமுக நகரக் கிளையின் சொத்துக்களும், பொறுப்புக்களும், கொடுக்கல்வாங்கல்களும் வளைய வேலியிடப்பட்டனவாதல் வேண்டுமென்பதுடன் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்புக்கு வெளியே ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியின் தொழிற்பாடுகளின் முகப்பளவில் தூர அடிப்படையின்மீது நடாத்தப்படுதலும்வேண்டும்; அத்துடன் கணக்கு வைத்திருப்பவர் ஒருவரின் நிதிகளை இலங்கை ரூபாக்களாக மாற்றுதல், அத்தகைய கணக்கு வைத்திருப்பவரினாலான தன்னிச்சையான நடவடிக்கைக்கு வரையறுக்கப்படுவதுடன் ஒரு கணக்குவைத்திருப்பவரின் சார்பில் கொழும்புத் துறைமுக நகரக் கிளையொன்றினால் இலங்கை ரூபா பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாக மாற்றப்படுதல் அனுமதிக்கப்படுதலுமாகாது.

9. கொழும்புத் துறைமுக நகரக் கிளையின் கணக்கு வைத்திருப்பவரொருவர் -

(அ) இலங்கையிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட பண்டங்களின் ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபடுமிடத்தும் அவ்வாறு ஏற்றுமதிசெய்யப்படவேண்டிய பண்டங்கள் தொடர்பில் (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அப்பயன்பட்ட சுங்க வெளிப்படுத்துகையைக் கோப்பிடுமிடத்தும்; அத்துடன்

(ஆ) ஏற்றுமதி வரும்படிகளை இலங்கையினுள் திருப்பியனுப்புதல் விதிகளின்கீழ் வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுகளைப் பெறுவதற்குத் தகவுடையவராக அத்தகைய விதிகளின் பொருளுக்குட்பட உள்நாட்டு வழங்குநரொருவராகவுள்ளவிடத்தும்,

அத்தகைய கணக்குவைத்திருப்பவர், சொல்லப்பட்ட ஏற்றுமதி வரும்படிகளை இலங்கையினுள் திருப்பியனுப்புதல் விதிகளின் மாற்றுதல் தேவைப்பாடுகளுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

10. (1) கொழும்புத் துறைமுக நகரக் கிளை, காலத்துக்குக்காலம், வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினாலும் இலங்கை மத்திய வங்கியினாலும் காலத்துக்குக்காலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகள் அல்லது வழிகாட்டுநெறிகளுக்கு இணங்கியொழுக, வங்கித்தொழில் வியாபாரத்தைத் தொடர்வதில் ஈடுபடலாம்:-

(அ) ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளிடமிருந்து அல்லது ஒரு வதிவற்றவரிடமிருந்து சேமிப்பு, கால மற்றும் கோரிக்கை வைப்புக்களை ஏற்றுக்கொள்ளலாம்;

(ஆ) எவரேனும் வதிவற்றவரிடமிருந்து ஒரு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் ஏதேனும் பணத்தொகையைக் கடனாகப்பெறலாம்;

(இ) ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் எவரேனும் வதிவற்றவருக்கு நிதிவசதி அளிக்கலாம்;

(ஈ) வேறேதேனும் கரைகடந்த கூறுடன் ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் ஏதேனும் கொடுக்கல்வாங்கலில் ஈடுபடலாம்;

(உ) ஒரு வதிவற்றவருடன் ஒரு பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வேறேதேனும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடலாம்;

(ஊ) சட்டத்தின்கீழ் எதிர்நோக்கப்படக்கூடிய வேறேதேனும் கொடுக்கல்வாங்கலில் ஈடுபடலாம்; அல்லது

(எ) இலங்கை மத்திய வங்கியின் ஒருப்பாட்டுடன் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வேறேதேனும் கொடுக்கல்வாங்கலில் ஈடுபடலாம்.

(2) கொழும்புத் துறைமுக நகரக் கிளை, சில்லறைக் கொடுக்கல்வாங்கல்களாக (1) ஆம் உபஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட வங்கித்தொழில் வியாபாரங்களுள் எவற்றிலும் ஈடுபடலாகாது.

(3) இவ்வுபஒழுங்குவிதியின் நோக்கத்துக்காக, "சில்லறைக் கொடுக்கல்வாங்கல்கள்" என்பது, ஐந்து இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்களை அல்லது ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதை விஞ்சாத, விடயத்துக்கேற்ப, கூட்டுமொத்த வைப்பு மீதியை, அல்லது கடன்களையும் முற்பணங்களையும் உடைய, கொழும்புத் துறைமுக நகரக் கிளையுடன் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் அல்லது வதிவற்றவரின் கொடுக்கல்வாங்கல்களாக இருத்தல் வேண்டும்.

11. கொழும்புத் துறைமுக நகரக் கிளை, எல்லா நேரங்களிலும் -

(அ) 15 மில்லியன் ஐஅடொலர்களைக் கொண்ட குறித்தளிக்கப்பட்ட மூலதனத்தை அல்லது ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதைப் பேணுதல் வேண்டும்;

(ஆ) ஆணைக்குழு வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் தரப்பட்டுள்ள குறைந்தபட்ச மூலதனத்தை எதிர்கொள்வதற்கமைய, கொழும்புத் துறைமுக நகரக் கிளை தொடர்பாகச் சொந்தநாட்டு ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் தாய் உருவகத்துக்கு ஏற்புடையற்பாலதாக அதனால் வழங்கப்பட்ட ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகளின்கீழ் தரப்பட்டுள்ளவாறு மூலதனப் போதுமாந்தன்மைத் தேவைப்பாடுகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்; அத்துடன்

(இ) சட்டத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு வதிவற்றவர்களிடமிருந்து அதன் தொழிற்பாடுகளுக்கான நிதிகள் எல்லா நேரங்களிலும் திரட்டப்படுதல் வேண்டுமென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

12. கொழும்புத் துறைமுக நகரக் கிளை தொடர்பான தாய் உருவகத்துக்கு ஏற்புடையற்பாலனவான ஒட்டுமொத்த ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகளின்படி ஒரு வளையவேலியிடப்பட்ட அடிப்படையின்மீது திரவத்தன்மை மேவுகை விகிதத்தையும் (திமேவி) மற்றும் தேறிய நிலையுறுதி நிதியளித்தல் விகிதத்தையும் (தேநிநிவி) கொழும்புத் துறைமுக நகரக் கிளையானது பேணுதல் வேண்டும்.

13. பசெல் கட்டுக்கோப்பின்கீழ் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு குறைந்தபட்ச முடுக்கி விகிதமொன்று, ஆணைக்குழு வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, சொந்தநாட்டு ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையினால் வழங்கப்பட்ட அதன் தாய் உருவகத்துக்கு ஏற்புடையற்பாலதான ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகளுக்கமைய, கொழும்புத் துறைமுக நகரக் கிளைக்காகத் தாய் உருவகத்தினால் பேணப்படுதல் வேண்டும்.

14. (1) கொழும்புத் துறைமுக நகரக் கிளையின் பிரதான நிறைவேற்று அலுவலரின், பிரதான ஆபத்து அலுவலரின் அல்லது சிரேட்ட முகாமைத்துவப் பணிகளைப் புரிகின்ற வேறெவரேனும் அலுவலரின் பதவிக்கான ஒவ்வொரு நியமனத்துக்காகவும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் எழுத்திலான முன்னங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன், அத்தகைய அங்கீகாரத்தை அளித்தலும் வேண்டும்.

(2) அத்தகைய நியமனங்களுக்கான அங்கீகாரத்தை அளிப்பதில், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அத்தகைய அந்தந்தப் பதவிகளை வகிப்பதற்கு அத்தகைய ஆட்கள் தகுதியுள்ளவர்களும் தகுந்தவர்களுமாவென்பதைத் தீர்மானித்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உபஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் தகுதியையும் தகுதிநிலையையும் தீர்மானிப்பதில், வங்கித்தொழில் சட்டத்தின் 42 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட கட்டளைக்கற்கள், கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்புக்கு வெளியே தொழிற்படுகின்ற, இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கிகளின் பிரதான நிறைவேற்று அலுவலரின், பிரதான ஆபத்து அலுவலரின் அல்லது சிரேட்ட முகாமைத்துவப் பணிகளைப் புரிகின்ற வேறெவரேனும் அலுவலரின் நியமனங்களுக்கு அத்தகைய கட்டளைக்கற்கள் ஏற்புடையற்பாலனவாக உள்ளன என்றாற்போன்று அத்தகைய நியமனங்களுக்காக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

15. கொழும்புத் துறைமுக நகரக் கிளையின் வைப்புக்கள் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் காப்பீடு செய்யப்படுதலாகாது.

16. (1) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், ஆணைக்குழுவுக்கான அறிவித்தலுடன், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் படிவத்திலும் கொழும்புத் துறைமுக நகரத்தினுள் கொழும்புத் துறைமுக நகரக் கிளையின் தொழிற்பாடுகளுடன் தொடர்புபடுகின்றவாறான அத்தகைய தகவல்களைக் கொடுத்துதவும்படி அதனைத் தேவைப்படுத்தலாம்.

(2) கொழும்புத் துறைமுக நகரக் கிளை, 3 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கான உரிமத்திற்கான விண்ணப்பம் செய்யப்படும் நேரத்தில் வெளிப்படுத்தப்படக்கூடியவாறு அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அடுத்துப்பின்னர் அங்கீகரிக்கப்படக்கூடியவாறு, அதன் கணக்குப்புத்தகங்களை, பதிவேடுகளை மற்றும் ஆவணங்களைப் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றில் பேணுதல் வேண்டும்.

17. இவ்வொழுங்குவிதிகளில் -

“சட்டம்” என்பது, 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் எனப் பொருள்படும்;

“குறித்தளிக்கப்பட்ட மூலதனம்” என்பது, 3 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் உப ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் கம்பெனியின் தலைமையலுவலகத்தினால் கொழும்பு துறைமுக நகர கிளைக்கு குறித்தளிக்கப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர்களின் அல்லது சமமான பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திலான மூலதன தொகை எனப் பொருள்படும்;

“வங்கித்தொழில் சட்டம்” என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டம் எனப் பொருள்படும்;

"கிளை" என்பது, வியாபாரமொன்று நடாத்தப்படுகின்ற கம்பெனியொன்றின் பிரதான அலுவலகம் அல்லது தலைமையலுவலகம் தவிர்ந்த ஓர் அமைவிடம் எனப் பொருள்படும்;

"இலங்கை மத்திய வங்கி" என்பது, 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி எனப் பொருள்படும்;

"2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (கரைகடந்த கம்பெனிகளைப் பதிவுசெய்தல்) ஒழுங்குவிதிகள் என்பது, 2022 ஆம் ஆண்டு நவெம்பர் 17 ஆந் திகதிய 2306/54 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (கரைகடந்த கம்பெனிகளைப் பதிவுசெய்தல்) ஒழுங்குவிதிகள் எனப் பொருள்படும்.

"கொழும்புத் துறைமுக நகரக் கிளை" என்பது, சட்டத்தின் 42 ஆம் பிரிவின் நியதிகளின்படி கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பில் அல்லது அதிலிருந்து கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு உரிமம்பெற்றவொரு கம்பெனியின் கிளையொன்று எனப் பொருள்படும்;

"ஆணைக்குழு" என்பது, சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு எனப் பொருள்படும்;

"பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் மத்திய வங்கியினால் "பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயம்" எனத் தீர்மானிக்கப்பட்டவொரு வெளிநாட்டு நாணயம் எனப் பொருள்படும்;

"வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர்" என்பது, (திருத்தப்பட்டவாறான) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் அத்தகைய பதத்துக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"நிதிநிறுவனங்கள்" என்பது, 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தில் தரப்பட்டுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல்
வேண்டும்;

"இலங்கையின் நிதிசார் உளவறிதற் கூறு" என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தில் தரப்பட்டுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"சொந்தநாட்டு ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை" என்பது, முறையான வங்கியின் கொழும்புத் துறைமுகக் கிளையின் தாய் உருவகம் எந்த நாட்டில் தாபிக்கப்பட்டுள்ளதோ அந்த நாட்டின் வங்கித்தொழிற்றுறை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை எனப் பொருள்படும்;

"கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரம்" என்பது, சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"தாய் உருவகம்" என்பது, சட்டத்தின்கீழ் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு உரிமமொன்று வழங்கப்படுவதற்காகக் கொழும்புத் துறைமுக நகரக் கிளையைத் தகவுடையதாக்குகின்ற வங்கித்தொழில் உரிமத்தை வைத்திருக்கின்ற உருவகம் எனப் பொருள்படும்;

"2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களைப் பதிவுசெய்தல், அவர்களுக்கு உரிமமளித்தல், அவர்களுக்கான அதிகாரவளிப்பு மற்றும் வேறு அங்கீகாரங்கள் ஒழுங்குவிதிகள்" என்பது, 2022, செத்தெம்பர் 28 ஆந் திகதிய 2299/46 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களைப் பதிவுசெய்தல், அவர்களுக்கு உரிமமளித்தல், அவர்களுக்கான அதிகாரவளிப்பு மற்றும் வேறு அங்கீகாரங்கள் ஒழுங்குவிதிகள் எனப் பொருள்படும்;

"ஏற்றுமதி வரும்படிகளை இலங்கையினுள் திருப்பியனுப்புதல்" என்பது, இலங்கை மத்திய வங்கியின் பணச்சபையினால் வழங்கப்பட்டவையும் (திருத்தப்பட்டவாறாக) 2022 ஆம் ஆண்டு மார்ச்சு 11 ஆந்தேதிய 2270/66 ஆம் இலக்க, (அதிவிசேட) வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையுமான 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஏற்றுமதி வரும்படிகளை இலங்கையினுள் திருப்பியனுப்புதல் விதிகள் எனப் பொருள்படும்;

"வதிவுள்ளவர்" மற்றும் "வதிவற்றவர்" என்பன, சட்டத்திலுள்ளவாறான அதேபொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

"இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம்" என்பது, 2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 39 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் எனப் பொருள்படும்.

EOG 07-0271

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.